Tyre Manufacturing Industry

*105 Q.—Thiru P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government propose to establish a Tyre Manufacturing Industry in Tiruppathur, Ramanathapuram district; and

(b) if so, the details thereof?

டயர் தொழிற்சாலை

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் டயர் தொழிற்சாலை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) ஆண்டொன்றுக்கு 3 லட்சம் மோட்டார் டயர்களையும், டியூப்புகளையும் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ 1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்திய அரசு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு இசைவுக் கடிதம் வழங்கியுள்ளது. இத்தொழிற்சாலையை கூட்டுத் துறையில் அமைப்பதற்காக தனியாக 'தமிழ்நாடு ரப்பர் லிமிடெட்' என்ற ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்பத்தூர் தாலுக்காவில் தக்கதோர் இடத்தில் இத்தொழிற்சாலை அமைக்கப்படும்.

Nib Industry in Sathur

*106 Q.—Thiru S. S. THENNARASU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Nib Industry in Sathur, Ramanathapuram district is running at profit; and

(b) whether there is any proposal to establish a Pen Industry in the public sector in Sathur itself?